THE HINDU (TAMIL)
13 NOV 2021
PAGE 7

உலா்வலம்   இந்து தமிழ் திசை

## முதுகலை, ஆராய்ச்சிப் படிப்புகளை தொடர

# புதுச்சேரி பல்கலைக்கழகத்துடன் இந்திய ராணுவம் புரிந்துணர்வு ஒப்பந்தம்

■ புதுச்சேரி

இந்திய ராணுவ அதிகாரிகள் முதுகலை, ஆராய்ச்சிப் படிப்புகளை தொடர புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்துடன் இந்திய ராணுவம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

இந்திய ராணுவத்தின் பயிற்சிப் பிரிவு பிரதிநிதியான மேஜர் ஜெனரல் விவேக் காஷ்யப், புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தின் பதிவாளர் (பொறுப்பு) பேராசிரியர் அமரேஷ் சமந்தராயா ஆகியோர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் நேற்று கையெழுத்திட்டனர்.



▲ இந்திய ராணுவத்தின் பயிற்சிப் பிரிவு பிரதிநிதியான மேஜர் ஜெனரல் விவேக் காஷ்யப், புதுச்சேரி மத்திய பல்கலைக்கழக பதிவாளர் (பொறுப்பு) பேராசிரியர் அமரேஷ் சமந்தராயா ஆகியோர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு துணைவேந்தர் குர்மீத் சிங் முன்னிலையில் பரிமாற்றிக் கொண்டனர்.

இந்நிகழ்வில் பங்கேற்ற பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் கூறுகையில், “இந்திய ராணுவத்துடன் (பயிற்சிப் பிரிவு) புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் மத்திய பல்கலைக்கழகம் கையெழுத்திட்டுள்ளது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் இந்திய ராணுவ அதிகாரிகளுக்கு புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகளில் முதுகலை மற்றும் ஆராய்ச்சி படிப்புகளை தொடர உதவுகிறது. ஆயுதப்படைகளுக்கு தேவைப்படும் எந்தக் கல்வி ஆராய்ச்சிக்கும் தயக்கமின்றி பல்கலைக் கழகம் உதவும். எதிர்காலத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் உள்ள துறைகளை தவிர்த்து முடிந்தவரை மேலும் பல்வேறு துறைகளில் இந்திய ராணுவ அதிகாரிகளுக்கு அதிகபட்ச உதவியை வழங்குவோம்” என்று தெரிவித்தார்.

இந்திய ராணுவத்தின் பயிற்சிப் பிரிவு பிரதிநிதியான மேஜர் ஜெனரல் விவேக் காஷ்யப் கூறுகையில், “நானோ அறிவியல் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, போர்த்திறனியல் மற்றும் இந்திய ராணுவத்தின் தேவைக்கேற்ப பல படிப்புகளுக்கு வரும் கல்வியாண்டில் அதிகமாக இளம் அதிகாரிகளை அனுப்ப இந்திய ராணுவம் முயற்சி செய்யும்” என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து மேஜர் ஜெனரல் காஷ்யப், சர்வதேச உறவுகள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் புல முதல்வர் பேராசிரியர் சுப்ரமணியம் ராஜு உள்ளிட்டோருடன் பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகளை பார்வையிட்டார்.

DINAMALAR

13 NOV 2021

PAGE 10

# புதுச்சேரி பல்கலை.,– ராணுவம் புரிந்துணர்வு ஒப்பந்தம்

**புதுச்சேரி, நவ. 13–**

புதுச்சேரி பல்கலைக்கழகம், இந்திய ராணுவம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் துணைவேந்தர் குர்மீத் சிங் முன்னிலையில் கையெழுத்தானது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் இந்திய ராணுவ அதிகாரிகளுக்கு புதுச்சேரி பல்கலைக் கழகத்தின் பல்வேறு துறைகளில் முதுகலைப் படிப்புகள் மற்றும் ஆராய்ச்சிப் படிப்பைத் தொடர முடியும்.

நிகழ்ச்சியில், பல்கலைக்கழக துணை வேந்தர் குர்மீத் சிங் பேசுகையில், தேசத்தின் மீதான இந்திய படைகளின் அர்ப்பணிப்பு அளவிட முடியாதது. ஆயுதப் படைகளுக்கு தேவைப்படும் எந்தக் கல்வி ஆராய்ச்சிக்கும் தயக்கமின்றி பல்கலைக்கழகம் உதவும். எதிர்காலத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் உள்ள துறைகளைத் தவிர்த்து, பல்வேறு துறைகளில் இந்திய ராணுவ அதிகாரிகளுக்கு அதிகபட்ச உதவியை வழங்கப்படும்' என்றார்.



இந்திய ராணுவ அதிகாரிகளின் கல்விக்காக புதுச்சேரி பல்கலைக்கழகம், இந்திய ராணுவம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் துணைவேந்தர் குர்மீத் சிங் முன்னிலையில் கையெழுத்தானது.

இந்திய ராணுவத்தின் பயிற்சி பிரிவு மேஜர் ஜெனரல் விவேக் காஷ்யப் பேசுகையில், 'ராணுவ அதிகாரிகளுக்கு கல்வி போதிப்பதில், புதுச்சேரி பல்கலைக்கழகம் எடுத்துள்ள முயற்சிகளை இந்திய ராணுவம் பாராட்டியுள்ளது.

நானோ அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, போர்த்திறனியல் மற்றும் இந்திய ராணுவத்தின் தேவைக்கேற்ப பல படிப்புகளுக்கு வரும் கல்வியாண்டில் அதிகமாக இளம் அதிகாரிகளை அனுப்ப இந்திய ராணுவம் முயற்சி செய்யும்.

இளைய தலைமுறையினரின் ஆற்றலை வெளிக்கொணரவும், இந்திய ஆயுதப் படைகளில் அவர்களை ஈர்க்கவும் இந்திய ராணுவம், கல்வி நிறுவனங்களுடன் முழு ஒத்துழைப்பு தர திட்டமிட்டுள்ளது' என்றார். பதிவாளர் அமரேஷ் சமந்தராயா, பல்வேறு புல முதல்வர்கள் மற்றும் துறை தலைவர்களும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

தொடர்ந்து மேஜர் ஜெனரல் காஷ்யப், சர்வதேச உறவுகள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் புல முதல்வர் சுப்ரமணியம் ராஜி, ஒருங்கிணைப்பாளர் ஹுமாயூன் ஆகியோருடன் பல்கலைக் கழகத்தின் பல்வேறு துறைகளை பார்வையிட்டார்.

DINATHANTHI

13 NOV 2021

PAGE 6

இந்திய ராணுவத்துடன்

# புதுவை பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம்

புதுச்சேரி, நவ.13-

புதுவை பல்கலைக்கழகம் இந்திய ராணுவத்துடன் (பயிற்சி பிரிவு) புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் மூலம் இந்திய ராணுவ அதிகாரிகளுக்கு புதுவை பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகளில் முதுகலை படிப்புகள் மற்றும் ஆராய்ச்சி படிப்பை தொடர உதவுகிறது. நிகழ்ச்சியில் பல்கலைக்கழகதுணைவேந்தர் குர்மீத்சிங் பேசும் போது, ஆயுதப்படைகளுக்கு தேவைப்படும் எந்த கல்வி ஆராய்ச்சிக்கும் தயக்கமின்றி பல்கலைக்கழகம் உதவும். மேலும் பல்வேறு துறைகளில் ராணுவ அதிகாரிகளுக்கு அதிகபட்ச உதவியை வழங்குவதில் புதுவை பல்கலைக்கழகம் மகிழ்ச்சியடையும் என்றார்.

இந்திய ராணுவத்தின் பயிற்சி பிரிவு பிரதிநிதியான மேஜர் ஜெனரல் விவேக் காஷ்யப் பேசும்போது, இளம் தலைமுறைகளின் ஆற்றலை வெளியில் கொண்டுவரவும், இந்திய ஆயுதப்படைகளில் அவர்களை ஈர்க்கவும், இந்திய ராணுவம் கல்வி நிறுவனங்களுடன் ஒத்துழைக்க விரும்புகிறது என்றார்.

நிகழ்ச்சியில் பல்கலைக்கழக பதிவாளர் அமரேஷ் சமந்தராயா, சர்வதேச உறவுகள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் புல முதல்வர் பேராசிரியர் சுப்ரமணியம் ராஜு மற்றும் ஒருங்கிணைப்பாளர் ஹுமாயூன் ஆகியோர் கலந்துகொண்டனர்.